ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு 57 ஓட்டுநர் பணியிடங்களை உருவாக்குதல் மற்றும் 59 புதிய வாகனங்களுக்கு எரிபொருள் வருடாந்திர செலவினம் ரூ.46.35 இலட்சம் ஆகியவற்றிற்கு ஒப்பளித்தல்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை

**அரசாணை** (நிலை) எண். 12 நாள்: 11.1.2008.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.70, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 25.5.07.
2. அரசாணை (நிலை) எண்.71 & 72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 25.5.07.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.69309/2007/எப் 1, நாள் 9.10.07.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் முக்கிய பிரமுகர்கள் வருகையின் போது பயன்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு இரண்டு மகேந்திரா ஸ்கார்பியோ அல்லது சமமான சீருந்து வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஐந்து கதவு கடினமான மேற்கூரையுடனமைந்த 121 சீருந்துகள் பல்வேறு களப் பணியாளர்களுக்காக 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு ஒதுக்கப்பட்ட இரண்டு சீருந்து தவிர, மீதமுள்ள 121 சீருந்துகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டுள்ளன என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

அ) முன்பு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிகாரிகளின் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக புதியதாக 64 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆ) மீதமுள்ள 57 வாகனங்கள் இதுவரை வாகனங்கள் வழங்கப்படாத கீழ்க்காணும் அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) | –1 |
| உதவி செயற்பொறியாளர் (பிரதம மந்திரி கிராம சாலைத்திட்டம்) (PMGSY) | – 29 |
| உதவி செயற்பொறியாளர் (குடிநீர் வழங்கல்) | – 22 |
| மண்டல ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிலைய முதல்வர்கள் | – 5 |
| மொத்தம் | 57 |



வாகனங்கள் வழங்காத பதவிகளுக்கு ஒதுக்கப்படும் வாகனங்களுக்கு ஓட்டுநர் பதவியும், எரிபொருள் செலவும் வழங்கப்பட வேண்டும் என்றும் தற்போது புதிதாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 57 வாகனங்களுக்கும் 57 ஓட்டுநர் பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டுமென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. 57 ஓட்டுநர் பதவிகள் உருவாக்கத்துக்கான செலவின விவரம் கீழ்வருமாறு:

57 ஓட்டுநர் பதவிகளுக்கான ஆண்டு செலவினம் –ரூ.63.24 இலட்சம்.

இவற்றில் 29 உதவி செயற்பொறியாளர் (பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்) களின் ஓட்டுநர்களுக்கான செலவினம் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகத்தின் கணக்குத் தலைப்பில் ஏற்கப்பட்டுள்ள செலவினம்) – ரூ.32.17 இலட்சம்

மீதமுள்ள 28 ஓட்டுநர் பதவிகளுக்காக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம். –ரூ.31.07 இலட்சம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தின் 2 வாகனங்கள் மற்றும் 29 மாவட்டங்களிலுள்ள 57 வாகனங்கள் உட்பட்ட மொத்தம் 59 வாகனங்களுக்கான எரிபொருள் செலவினம் ரூ.30.07 இலட்சங்களாகும். இச்செலவினத்தில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 29 வாகனங்களுக்கான எரிபொருள் செலவு ரூ.14.79 இலட்சங்கள் மேற்கொள்ளப்படும். எனவே எரிபொருள் செலவுக்கான கூடுதல் செலவினம் ரூ.15.28 இலட்சங்களாகும். இந் நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பிற்சேர்க்கையில் கண்டுள்ளவாறு 57 ஓட்டுநர் பதவிகளை உருவாக்கவும், இப்பணியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தற்காலிகமாக நிரப்ப அனுமதி அளித்தும் அதற்கான எரிபொருள் செலவினத்துக்கும் சேர்த்து அரசுக்கு ஏற்படும் கூடுதல் ஆண்டு செலவினமான ரூ.46.35 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தி ஆறு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்புதலளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்தம் 57 ஓட்டுநர் பதவிகளில், 28 ஓட்டுநர் பதவிகளுக்காக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை (ரூ.31.07 இலட்சங்கள்) மற்றும் எரிபொருள் செலவுக்கான கூடுதல் செலவினத் தொகை (ரூ.15.28 இலட்சங்கள்) கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(1) 2505–ஊரக வேலை வாய்ப்பு – 01 – தேசிய திட்டங்கள் – 702– ஜவஉறர் கிராம மேம்பாட்டுத் திட்டம் – 11வது ஐந்தாண்டு திட்டம் – II மாநில திட்டம் – JA சம்பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் – வட்டார ஊராட்சிகள் – 01.01 சம்பளங்கள்
(து.தொ.கு.எண்.2505–01–702–JA-0106) ரூ.1,12,056
45–பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ. 51,000
(து.தொ.கு.எண்.2505–01–702–JA-4504)

(2) 2215 – குடிநீர் வழங்கலும் துப்புரவும் – 01– குடிநீர் வழங்கல் – 197 – வளர்ச்சி வட்டார ஊராட்சிகள், இடைநிலை ஊராட்சிகளுக்கு நிதியுதவி – I திட்டத்தில் சேராதது AA கைப் பம்புகளையும் மின்சார பம்புகளையும் பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியுதவி

0101 சம்பளங்கள் (து.தொ.கு.எண்.2215–01–197–AA-0109) ரூ.24,33,024
45–பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.11,22,.000
(து.தொ.கு.எண்.2215–01–197–AA-4507)

(3) 2515 .00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 003 . பயிற்சி – 1. திட்டத்தில் சேராதது –AD – ஊரக பயிற்சி விரிவாக்க மையங்கள் – 01.01 சம்பளங்கள்
(து.தொ.கு.எண்.2515–003–AD-0100) ரூ.5,61,960
45–பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.2,24,400
(து.தொ.கு.எண்.2515–00–003– AD-4508)

(4) 2515–.00–ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 – நெறிப்படுத்துவதும் மற்றும் நிருவாகமும்–1 திட்டத்தில் சேராதது – AA - ஊரக வளர்ச்சி இயக்ககம் 45 – பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்.

(கு.தொ.கு.எண்.2515–00–001–AA-4508) ரூ. 1,30,560

---------

ஆக கூடுதல் ரூ.46,35,000

---------

(ரூபாய் நாற்பத்தி ஆறு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதிய துணைப் பணி குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கானச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BG-I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (BG-I) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை 2007–08ம் ஆண்டிற்கான துணை மான்யக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை அனுப்பி வைக்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.378/DS (APP)/2007, நாள் 10.1.2008, நிதி.2512 / மை.மஆ.பீ / 08, நாள் 11.1.2008 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1661 (ஆயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று ) படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்.